**<u>சுருக்கம்</u>**

துப்புரவு – ஊரகப்பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க/நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அரசுப்பள்ளிகளிலுள்ள கழிப்பறைகளைத் தூய்மையாகப் பேணுதல் – வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஏற்பளிக்கப்படுகிறது – ஆணைகள்– வெளியிடப்படுகிறது.

---

**<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி.1) துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.151** **நாள். 30.11.2015**

படிக்கவும்:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் **31.08.2015**ஆம் நாளிட்ட **60354/2015/NBA-1**ஆம் எண் கடிதம்.

**<u>ஆணை</u>**

பள்ளிக்கல்வி (S.E.4(1)) துறையின் **13.04.2015**ஆம் நாளிட்ட 77ஆம் (நிலை) எண் அரசாணையில், உள்ளாட்சி அமைப்புகளின் அந்தந்த அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பள்ளிகளிலுள்ள கழிப்பறைகளைப் பேணும் பொறுப்பு உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**2.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், மேற்சொன்ன ஆணையைச் செயல்படுத்துவதற்கு பின்வரும் நடைமுறை பற்றி கருத்து தெரிவிக்கப்படுகிறது என்று மேலும் தெரிவித்துள்ளார். அவை வருமாறு:-

I. முகவரமைப்பு ஒன்றின் வாயிலாக அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் முழுநேர/பகுதிநேரத் துப்புரவுப் பணியாளர்கள் வாயிலாக அல்லது தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்துவதன் வாயிலாக,
II. இதற்கு தேவைப்படும் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையானது, அவசரத் தேவைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் முடிவுசெய்யப்படலாம்.
III. அத்தகைய துப்புரவுப்பணியாளர்களின் வருகையும், அவர்களின் பணியும் அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களால் கண்காணிக்கப்படும்.

IV. தூய்மைப்படுத்துவதற்குத் தேவைப்படும் உபகரணங்களும் பொருட்களும் சம்பந்தப்பபட்ட உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட வேண்டும்.

V. இச்செலவினமானது, ஊரக உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்தும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில், கல்வி மேல்வரியிலிருந்து (செஸ்) மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், பின்வரும் கருத்துக்களையும் கருதிப் பார்க்குமாறு சுட்டிக் காட்டியுள்ளார் :

a) இங்கு, ஏறத்தாழ 27,700 ஊராட்சி ஒன்றியத் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளும் 7,247 பள்ளிக் கல்வித் துறைப் பள்ளிகளும் உள்ளன. மொத்தத்தில் ஊரகப்பகுதிகளில் ஏறத்தாழ 34,947 அரசுப் பள்ளிகள் உள்ளன.
b) கழிவறையைத் தூய்மைப்படுத்தும் பணி என்பது, கொடுக்கப்பட்ட நாளின், குறிப்பாக பள்ளி வேலைநாட்களில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்ற பணியாகும்.
c) சராசரியாக ஒரு மாதத்தில் 22 பணிநாட்களும், ஒரு கல்வியாண்டில் 10 பணி மாதங்களும் உள்ளன.
d) தற்போது, பல்வேறு துப்புரவு தொடர்பான பணிகளுக்காக, கிராம ஊராட்சிகளால் 24,928 முழுநேரத் துப்புரவுப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். எனவே, பள்ளிக் கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்துவதற்கு, அவர்கள் அனைவரையும் முழுமையாகப் பயன்படுத்த இயலாது.
e) பள்ளிக்கல்வி (S.E.4(1)) துறையின் 13.04.2015ஆம் நாளிட்ட 77ஆம் (நிலை) எண் அரசாணையின்படி, மேற்சொன்ன செயல்நோக்கங்களுக்கு, திடக்கழிவு மேலாண்மை நிதியினைப் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், பள்ளிக் கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்துவதற்கு பின்வரும் செலவினம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

**1) பகுதிநேரத் துப்புரவுப் பணியாளர்களைப் பணியமர்த்துவதற்கு ஆகும் செலவு**

பள்ளிக் கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்துவதற்கு, பகுதிநேரத் துப்புரவுப் பணியாளர்களைப் பணியமர்த்துவது தொடர்பாக ஆண்டொன்றுக்கு ஆகும் மொத்த செலவினம் ஏறத்தாழ ரூ.39.79 கோடி ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மதிப்பிடப்படுகிறது. இதன் விவரம் வருமாறு:-

| தொடர் எண் | பள்ளிகளின் வகை | பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை | மாதம் ஒன்றுக்கு ஒரு பள்ளிக்கான தொகை (ரூ.) | ஆண்டொன்றுக் கான மொத்தத் தேவை. (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய /அரசுத் தொடக்கப் பள்ளிகள் | 22,796 | 750 | 2051.64 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஊராட்சி ஒன்றிய / அரசு நடுநிலைப் பள்ளிகள் | 6,797 | 1,000 | 815.64 |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளிகள் | 2,892 | 1,500 | 520.56 |
| 4 | அரசு மேல்நிலைப் பள்ளிகள் | 2,462 | 2,000 | 590.88 |
| | பெருமொத்தம் | 34,947 | | 3978.72 |

**2) தூய்மைப்படுத்தும் பொருட்களுக்கு வகைசெய்தல்**

கழிப்பறையைத் தூய்மைப்படுத்துவதற்கு வாளி, குவளை மற்றும் பயன்பாட்டுப் பொருட்களான துடைப்பம், பிளீச்சிங் பவுடர் போன்றவை தேவைப்படுகின்றன. இவற்றில் வாளியும், குவளையும் நெடுநாள் பயன்பாட்டிற்கு உரியவையாகவும் மற்றவை அவ்வப்போது கழித்துக்கட்டப்பட்டு புதிதாக வாங்கப்பட வேண்டியவையாகவும் இருக்கின்றன. தூய்மைப்படுத்தும் பொருட்களுக்குத் தேவைப்படும் உத்தேச நிதி பற்றிய விவரம் வருமாறு:-

| தொடர் எண் | பள்ளிகளின் வகை | பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை | மாதம் ஒன்றுக்கு ஒரு பள்ளிக்கான தொகை (ரூ.) | ஆண்டொன்றுக் கான மொத்தத் தேவை. (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய / அரசுத் தொடக்கப் பள்ளிகள் | 22,796 | 300 | 820.66 |
| 2 | ஊராட்சி ஒன்றிய / அரசு நடுநிலைப்பள்ளிகள் | 6,797 | 500 | 407.82 |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளிகள் | 2,892 | 750 | 260.28 |
| 4 | அரசு மேல்நிலைப் பள்ளிகள் | 2,462 | 1000 | 295.44 |
| | பெருமொத்தம் | 34,947 | | 1784.20 |

எனவே, துப்புரவுப் பணியாளர்களைப் பணியமர்த்துவதற்கும், ஆண்டொன்றுக்கு தூய்மைப் பொருட்களுக்கு ஆகும் செலவுத் தொகையும் ஏறத்தாழ ரூ.57.63 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விவரம் வருமாறு

துப்புரவுப் பணியாளர்களைப் பணியமர்த்துவதற்கு ஆகும் செலவு : ரூ.39.79 கோடி

தூய்மைப்படுத்தும் பொருட்களுக்கான செலவு : ரூ.17.84 கோடி

மொத்தம் : ரூ.57.63 கோடி

அரசின் பள்ளிக் கல்வித் துறையால் ஏற்கனவே உத்தரவிடப்பட்டவாறாக, மேற்சொன்ன செலவினமானது, திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் (காண்க : பள்ளிக்கல்வி (S.E.4(1)) துறையின் 13.04.2015ஆம் நாளிட்ட 77ஆம் (நிலை) எண் அரசாணை). வழிகாட்டி நெறிமுறைகள் வழிவகையின்படி மாவட்ட ஆட்சியர்கள் அளித்த தேவைகளின் அடிப்படையில், அவர்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், நிதி வழங்க வேண்டும் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். பதிலுக்கு, மாவட்ட ஆட்சியர்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதிகளை வழங்குவர்.

இதுதொடர்பாக, பின்வரும் கணக்குத் தலைப்பில், திடக்கழிவு மேலாண்மைக்காக 2015–16 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டமதிப்பீட்டில், ஏற்கனவே, ரூ.200 கோடி வகை செய்யப்பட்டுள்ளது என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

***2515–00– ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டம் – 800 ஏனைய செலவினம் – I திட்டம் சாரா – தூய்மை கிராம இயக்கத் திட்டத்திற்கு AO மானியங்கள் – 09 உதவி மானியம் – 03 குறிப்பிட்ட திட்டத்திற்கான மானியங்கள் (த.தொ.கு.எண்.2515–00–800– AO-0939)***

**3.** எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், ஊரகப் பகுதிகளிலுள்ள பள்ளிக்கழிப்பறைகளை தூய்மையாகப் பேணுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைத் தொகைகளில் மாவட்ட ஆட்சியர்கள் வாயிலாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மேற்சொன்ன கணக்குத் தலைப்பிலிருந்து, 2015–16ஆம் ஆண்டிற்குத் தேவைப்படும் தொகையைப் பெற்று வழங்குவதற்கும், ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளிலும் அரசுப் பள்ளிகளிலும் உள்ள பள்ளிக் கழிப்பறைகளைத் தூய்மையாகப் பேணுவதற்கான வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஏற்பளிப்பதற்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்குமாறு அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

**4.** அரசு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பை கவனமுடன் பரிசீலித்த பின்னர், இந்த ஆணையில் இணைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஊரகப் பகுதிகளிலுள்ள பள்ளிக்கழிப்பறைகளைத் தூய்மையாகப் பேணுவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைத் தொகைகளில் மாவட்ட ஆட்சியர்கள் வாயிலாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு 2015–16ஆம் ஆண்டிற்குத் தேவைப்படும் தொகையைப் பெற்று வழங்குவதற்கும், ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்க / நடுநிலைப் பள்ளிகளிலும் அரசுப் பள்ளிகளிலும் உள்ள பள்ளிக் கழிப்பறைகளைத் தூய்மையாகப் பேணுவதற்கான வழிகாட்டி நெறிமுறைகளுக்கு

ஏற்பளிப்பதற்கும், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கிறது. அந்நிபந்தனைகள் பின்வருமாறு:-

1) உள்ளாட்சி அமைப்புகளில், தற்போது பணிபுரிந்து வருகின்ற துப்புரவுப் பணியாளர்கள், சாத்தியமான இடங்களில், பள்ளிக்கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படலாம்.
2) அவ்வாறு இயலாத நிலையில், பகுதிநேர துப்புரவுப் பணியாளர்களைப் பணிமர்த்துவதற்குப் பதிலாக, வெளிக்கொள்முதல் (out sourced) முறையில் இப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
3) பள்ளிக்கல்வித் துறையின் 13.04.2015ஆம் நாளிட்ட 77ஆம் (நிலை) எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி, தேவைப்படும் தூய்மைப்படுத்தும் பொருட்களும், கருவிகளும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணையின்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15 வாயிலாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15 வாயிலாக)

<u>நகல் பெறுவோர்</u>
முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை – 9
நிதித் (ஊவ) துறை, சென்னை – 9
மாநில கணக்குத் துறைத் தலைவர், சென்னை – 18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 35
மாண்புமிகு அமைச்சரின் (ந.நி., ஊ.வ., சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள்) முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
அரசு செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை – 9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (அந–II) துறை, சென்னை – 9
தேசிய தகவல் மையம், சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

<u>ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க/நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை தூய்மையாக பேணுதல் குறித்து வழங்கப்படும் வழிகாட்டிநெறிமுறைகள்</u>

**1. முகவுரை:**

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர் மற்றும் மாணவியர் பயன்பாட்டிற்காக கழிப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்வதற்கான போதிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இப்பள்ளிகளில், மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி கருதி, உடல் நலம் மற்றும் சுகாதாரத்தை பேணும் விதத்தில், அனைத்து வசதிகளையும் அமைத்துத் தரவேண்டியது மிக மிக இன்றியமையாததாகும். அரசுப் பள்ளிகளில் நீடித்த சுகாதார வசதிகளுக்காக, கழிப்பறைகளைத் தூய்மையாகப் பேணுதற்கு போதிய நிதியும், வழிகாட்டிநெறிமுறைகளுக்கும் வகை செய்யப்படுகின்றன.

**2. வெளிப்பணியாளர்களை துப்புரவுப் பணியாளர்களாக பணியமர்த்துதல்:**

- ஒவ்வொரு அரசுப் பள்ளியையும்/ஊராட்சி ஒன்றியப் பள்ளியையும் தூய்மைப் படுத்த, <u>வெளியிலிருந்து ஆட்களைத் தருவித்து பணியமர்த்திக் கொள்ளும் முறையில்</u>, துப்புரவு பணியாளர் ஒருவரை அந்தந்த கிராமப் ஊராட்சி/பெற்றோர் ஆசிரியர் கழகம்/தலைமை ஆசிரியர் பணியமர்த்தி கொள்ளலாம். கிராம வறுமை தணிப்புக் குழு (VPRC) அல்லது ஊராட்சி அளவிலான இணையங்கள் (PLF) அல்லது வேறு வெளிப் பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள ஏற்பாடு செய்து தரும் முகவரமைப்பு வாயிலாக மட்டுமே இத்தகையப் பணிக்கு பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள வேண்டும். பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாத தொகுப்பூதியமானது, பணியாளர் பெயரில் இல்லாமல், கிராம வறுமை தணிப்புக் குழு (VPRC) / ஊராட்சி அளவிலான இணையங்கள் (PLF) / வேறு வெளிப் பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள ஏற்பாடு செய்து தரும் முகவரமைப்பு வாயிலாக <u>மட்டுமே</u> வழங்கப்பட வேண்டும்.
- மாணவர் மற்றும் மாணவியர் ஆகிய இருபாலரும் பயிலும் பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்தும் பொறுப்பு அந்த துப்புரவுப்பணியாளரையே சாரும்.
- பெண்கள் மட்டுமே பயிலும் பள்ளிகளில், பெண் தூய்மைப் பணியாளர்கள் மட்டுமே தூய்மைப் பணியமர்த்தப்பட வேண்டும்.

**3. தூய்மைப்படுத்துவதற்கான குறிப்பிட்ட காலஅளவு**

- இத்தூய்மைப் பணி நாள்தோறும் இருமுறை கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகையப் பணி காலை ஒருமுறையும், மதியம் ஒருமுறையுமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

**4. வெளியிலிருந்து பணியமர்த்தப்படும் துப்புரவப்பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குதல்:**

பள்ளி வேலை நாட்களில், நாளொன்றுக்கு சராசரியாக மூன்று நான்கு முறைகள் இத்தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால், வெளியிலிருந்து பணியமர்த்தப்படும் துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய மாதத் தொகுப்பூதியமானது, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிர்ணயிக்கப்படுகிறது:-

**துப்புரவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாத ஊதியம்**

| தொடர் எண் | பள்ளியின் வகை | மாதத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | ஊராட்சி ஒன்றிய/அரசு தொடக்கப் பள்ளி | 750/– |
| 2. | ஊராட்சி ஒன்றிய/அரசு நடுநிலைப் பள்ளி | 1000/– |
| 3. | அரசு உயர்நிலைப் பள்ளி | 1500/– |
| 4. | அரசு மேல்நிலைப் பள்ளி | 2000/– |

**5. தூய்மைப்படுத்தும் பொருட்களுக்கு நிதி ஒதுக்கீடு:**

- கழிப்பறையை சுத்தம் செய்வதற்கு வாளி, குவளை மற்றும் பயன்பாட்டு பொருட்களான துடைப்பம், பிளீச்சிங் பவுடர் போன்ற பொருட்கள் தேவைப்படலாம். இவற்றில் வாளியும், குவளையும் நெடுநாள் பயன்பாட்டிற்கு உரியவையாகவும் மற்றவை அவ்வப்போது கழித்துக்கட்டப்பட்டு புதிதாக வாங்கப்பட வேண்டியவையாகவும் இருக்கின்றன.
- ஒவ்வொரு பள்ளிகளும் கீழே அளிக்கப்பட்டவாறாக பின்வரும் ஒட்டுமொத்த மாதாந்திர நிதி ஒதுக்கீடு வழங்கப்படும்.

**தூய்மைப்படுத்தும் பொருட்களுக்கான மாதாந்திர நிதி ஒதுக்கீடு**

| தொடர் எண் | பள்ளியின் வகை | மாதமொன்றுக்கான தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | ஊராட்சி ஒன்றிய/அரசு தொடக்கப் பள்ளி | 300/– |
| 2. | ஊராட்சி ஒன்றிய/அரசு நடுநிலைப் பள்ளி | 500/– |
| 3. | அரசு உயர்நிலைப் பள்ளி | 750/– |
| 4. | அரசு மேல்நிலைப் பள்ளி | 1000/– |

- அந்தந்த பள்ளி தலைமையாசிரியர், இத்தகைய தூய்மைப்படுத்தும் பொருட்களை வாங்கி இருப்பு வைத்துக் கொள்ளவேண்டும். அந்த தலைமை ஆசிரியர்/ ஆசிரியை முறையான இருப்பு அளவினை உறுதி செய்து கொள்வதுடன் தேவைக்கேற்ப, தூய்மைப்படுத்தும் பொருட்களை வழங்கிட வேண்டும்.

**6. ஊராட்சி ஒன்றியத்தால் விடுவிக்கப்பட வேண்டிய நிதி**

- வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), துப்புரவுப் பணியாளர்களை, பணிக்கு அனுப்பி தூய்மைப் பணியை மேற்கொள்ள, ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஜூன் முதல் நாளன்றும் டிசம்பர் முதல் நாளன்றும், ஆக இருமுறை முன்னதாகவே அந்தந்த பள்ளிகளின் கிராமக் கல்விக் குழுக் கணக்கில் தொகை வரவு வைக்கப்பட ஏதுவாக, கிராம வறுமை தணிப்புக் குழு (VPRC) / ஊராட்சி அளவிலான இணையங்கள் (PLF) / வேறு வெளிப் பணியாளர்களை அமர்த்திக் கொள்ள ஏற்பாடு செய்து தரும் முகவரமைப்பு இவற்றிற்கு நிதியை விடுவிக்க வேண்டும்.

**ஒவ்வொரு வகையான பள்ளிக்கும் அரையாண்டுக்குத் தேவைப்படும் நிதியளவு**

| தொடர் எண் | பள்ளியின் வகை | துப்புரவுப் பணியாளருக்கு மாதந்தோறும் வழங்கப்பட வேண்டிய தொகை (ரூ.) | தூய்மைப்படுத்தும் பொருட்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட வேண்டிய தொகை (ரூ.) | மொத்தத் தொகை (ரூ.) | பள்ளி ஒன்றிற்கு விடுவிக்கப்பட வேண்டிய அரையாண்டிற் கான நிதியளவு |
|---|---|---|---|---|---|
| 1. | ஊராட்சி ஒன்றிய/அரசு தொடக்கப் பள்ளி | 750 | 300 | 1,050 | 6,300 |
| 2. | ஊராட்சி ஒன்றிய/அரசு நடுநிலைப் பள்ளி | 1000 | 500 | 1,500 | 9,000 |
| 3. | அரசு உயர்நிலைப் பள்ளி | 1500 | 750 | 2,250 | 13,500 |
| 4. | அரசு மேல்நிலைப் பள்ளி | 2,000 | 1,000 | 3,000 | 18,000 |

- அந்தந்த பள்ளியின் தலைமையாசிரியரால் அளிக்கப்படும், முந்தைய அரையாண்டிற்கான, வெளியிலிருந்த அமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர் குறித்த பணிச் சான்றிதழ், பணியாளரிடமிருந்து பெறப்பட்ட ஊதிய ஒப்புகை இவற்றின் அடிப்படையில், கிராம கல்விக் குழுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கு ஏதுவாக, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) தொகைகளை விடுவிக்க வேண்டும். கிராம வறுமை தணிப்புக் குழு (VPRC) / ஊராட்சி அளவிலான இணையங்கள் (PLF) / வேறு வெளிப் பணியாளர்களை அமர்த்திக் கொள்ள ஏற்பாடு செய்து தரும் முகவரமைப்பு அளிக்கும் பணியாளர்களின் வருகைப்பதிவு அடிப்படையில், கிராம கல்விக் குழுவானது, அந்த அமைப்புகளுக்கு நிதி விடுவிக்கும்.

- பணியாளர்களுக்கு வழங்கிடும் ஊதியச் செலவு குறித்தும், தூய்மைப்படுத்தும் பொருட்களை வாங்குவதற்காக செலவிடப்படும் தொகைக்கான விவரங்கள் குறித்தும் முறையான வரவு செலவுக் கணக்கினை அந்தந்த பள்ளி தலைமையாசிரியர் முறையாக வைத்து வருவதை உறுதி செய்ய வேண்டும்.

## 7. கண்காணித்தல்

- **பள்ளி அளவில்:** பள்ளிக் கழிப்பறையை தூய்மை செய்வதற்கான பணியை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு தலைமையாசிரியருடையதே. வெளியிலிருந்து பணியமர்த்தப்படும் துப்புரவுப் பணியாளரின் வருகைப் பதிவை அவர்தான் பேணி வரவேண்டும். மேலும், தூய்மைப்படுத்தும் பணிக்குத் தேவையான பொருட்களின் இருப்பை பேணுதலோடு நாளொன்றுக்கு குறைந்தது இருமுறையேனும் கழிப்பறைகள் தூய்மை செய்யப்படுவதை அவர் உறுதி செய்ய வேண்டும். குறைந்தது வாரத்திற்கு ஒருமுறையேனும் அந்தந்த கிராம ஊராட்சி தலைவர், வார்டு உறுப்பினர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி கழிப்பறைகளின் தூய்மைப்படுத்தும் பணியை ஆய்வு செய்ய வேண்டும்.
- **வட்டார அளவில்:** குறைந்தது மாதத்திற்கு ஒருமுறையேனும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும் பள்ளிக் கல்வித் துறையின் வட்டார வளஆதார மையத்திலுள்ளோரும் அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட பள்ளிகள் அனைத்தையும் பார்வையிட வேண்டும். பள்ளிகளிலுள்ள கழிப்பறைகளின் தூய்மை பேணுகைக் குறித்த பணியை ஒவ்வொரு காலாண்டிலும் தலைமையாசிரியர் பொறுப்பாகக் கண்காணித்து வருகிறாரா என்பதை வட்டார வளர்ச்சிஅலுவலர் (வட்டார ஊராட்சி), வட்டார வளஆதார மையத்தின் கண்காணிப்பாளர் மற்றும் உதவி தொடக்க கல்வி அலுவலர்/கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலர், அனைவரும் இணைந்து ஆய்வு செய்ய வேண்டும்.
- **மாவட்ட அளவில்:** பள்ளியிலுள்ள கழிப்பறைகளின் தூய்மைப்பணியை ஆய்வு மற்றும் கண்காணிப்பு செய்ய ஒவ்வொரு வட்டாரத்திற்கும், மாவட்ட ஆட்சியர், பள்ளிக்கல்வித்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆகியவற்றிலிருந்து மாவட்ட அளவிலான அதிகாரிகளை மண்டல அதிகாரிகளாக நியமனம் செய்ய வேண்டும். பள்ளிக் கழிப்பறைகளின் தூய்மைப்பணி குறித்து ஒவ்வொரு காலாண்டிலும் ஓராய்வினை நடத்திட மாவட்ட ஆட்சியர் மண்டல அதிகாரிகளின் கூட்டத்தை நடத்த வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளில், தற்போது பணிபுரிந்து வருகின்ற துப்புரவுப் பணியாளர்கள், சாத்தியமான இடங்களில், பள்ளிக்கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படலாம்.

பள்ளிக்கல்வித் துறையின் **13.04.2015**ஆம் நாளிட்ட **77**ஆம் (நிலை) எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி, தேவைப்படும் தூய்மைப்படுத்தும் பொருட்களும், கருவிகளும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட வேண்டும்.

ஊரகப்பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க / நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளின் கழிப்பறைத் தூய்மைப்பணிகளுக்கு ஆகும் செலவினத்தை, இவ்வாண்டிற்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில், திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் எந்த ஒன்றையும் நடைமுறைப்படுத்துவதில், அவ்வப்போது ஏற்படும் தேவைகளுக்கு ஏற்ப, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் கலந்தாய்வு செய்து மாற்றங்களைக் கொண்டு வர ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசுசெயலாளர் அதிகாரம் பெற்றவராவார்.

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்